விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 303 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 01 சனிக்கிழமை (18.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது

### புதுடில்லியில் பிரதமர் ஹரிணி



(புதுடில்லி)

இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் இலங்கைப்பூமியைப் பயன்படுத்த எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தனது இந்திய உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, தாம் கல்வி கற்ற டெல்லி இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்த வேளையிலேயே அவர்

02ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.போதனா வைத்தியசாலை ஆரம்பமாகி 175 வருட நிறைவு

### விசேட தபால் முத்திரை வெளியீடு மருத்துவமனையில் உப தபாலகம் திறப்பு



05ஆம் பக்கம் பார்க்க

எதிர்வரும் 26ஆம் திகதி

## வடக்கு மாகாணத்தில் 13 மணி நேர மின்வெட்டு

### மன்னாரில் மின் தடைப்படாது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் எதிர்வரும் 26ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை மின்சாரம் தடைப்பட்

15ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளத்தில் விபத்து: இளைஞன் உயிரிழப்பு

(மாங்குளம்)

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியின் மாங்குளம் நகருக்கு அருகில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த பகுதியில் திரவப் பால் ஏற்றிச் சென்ற பவுசர் ஒன்று, வேகத்தைக்

15ஆம் பக்கம் பார்க்க


# கடற்றொழிலாளர்கள் பிரச்சினை தொடர்பாக

## இலங்கை - இந்திய பிரதமர்கள் பேச்சு

(புதுடில்லி)


இலங்கை – இந்திய கடற்றொழிலாளர்கள் பிரச்சினை தொடர்பாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)



தொடரும் சீரற்ற காலநிலை

## மந்திரிமனையைப் பாதுகாக்க அதன் கூரைகள் அகற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொடரும் சீரற்ற காலநிலையில் மந்திரிமனை மேலும் சேதமடைவதைத் தடுக்கும் வகையில், மந்திரிமனையின் வாயில் பகுதியில் உள்ள கூரைகள் அகற்றப்பட்டு பாதுகாக்க ஏற்பாடுகள்

15ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு

## 13ஆவது திருத்தம் தொடர்பில் சரியான கருத்து இல்லை – சுரேஷ்



(யாழ்ப்பாணம்)

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதில் தாங்கள் போட்டியிடுவோம் எனக் கூறுகின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், பிறகு 13ஆம் திருத்தச் சட்டத்தை அடியோடு மறுக்கிறோம் என்கின்றனர். அதனால் அவர்களுக்கு அது தொடர்பில் சரியான கருத்து

04ஆம் பக்கம் பார்க்க

தீபாவளியை முன்னிட்டு

## நான்கு மாகாணங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை

(கொழும்பு)

தீபாவளிப் பண்டிகைக்கு மறுநாள் செவ்வாய்க்கிழமை (21) அன்று மத்திய, கிழக்கு, ஊவா மற்றும் சப்ரகமுவ ஆகிய நான்கு மாகாணங்களிலுள்ள அனைத்து தமிழ்ப் பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கேதார கௌரி விரதம் மற்றும் தூரப் பிரதேச மாணவர்களது நலன்கருதி குறித்த

15ஆம் பக்கம் பார்க்க

வடக்கு மாகாணத்தில்

## தீபாவளியன்று மதுச்சாலைகள் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தீபாவளி தினத்தன்று அனைத்து உரிமம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களையும் மூடுவதற்குத்

15ஆம் பக்கம் பார்க்க

செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்த

## பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

இஷாரா செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் கீழ் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர், அவரது மனைவியின் தாய் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WIN'S Repair

குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித் தருகின்றோம். பிளமிங், வயரிங், பெயின்ரிங், CCTV கமரா பொருத்துதல் சேவைகளும் உண்டு.

தொடர்புகளுக்கு :

**076 834 6136**

(5682)



## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்திற்கு சாரதிக்கான (Light Vehicle) வெற்றிடம் உள்ளது.

நேர்முகத் தேர்வு

18.10.2025, 21.10.2025, 22.10.2025

(காலை 10 மணிமுதல் மாலை 04 மணி வரை)

இடம் : இல.758, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

**076 929 5931**

(C-4125)



## ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாய விடுமுறை! பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்திற்கு நன்றி

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களைப் பூட்டும் தீர்மானத்தின் அடிப்படையில் கட்டாய விடுமுறையினைப் பெற்றுத்தந்த பருத்தித் துறை வர்த்தகர் சங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் பருத்தித்துறை நகரினை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டுசெல்லும் அதன் முயற்சியை பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-4132)

பருத்தித்துறை நகர் தொழிலாளர்கள்


## இந்தியாவின்...

இதனைக் குறிப்பிட்டார்.

இந்தக் கல்லூரியின் புதிய ஆய்வு கூடம் ஒன்றுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரியவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இங்கு கருத்துத் தெரிவித்த கலாநிதி ஹரிணி அமரசூரிய,

இந்தியாவும் இலங்கையும் பாரம்பரியம், விழுமியங்கள் மற்றும் பரஸ்பர மரியாதை என்ற பொதுவான பாரம்பரியங்களால் பிணைக்கப்பட்டுள்ளன.

சில சமயங்களில் நாம் ஒருவருக்கொருவர் உடன்படாமல் இருக்கலாம். ஒருவருக்கொருவர் எல்லாவற்றையும் விரும்பாமலும் இருக்கலாம். அதுதான் ஒரு குடும்பத்தின் இயல்பு.

இந்தியா எப்போதும் இலங்கையின் பயண வழியில் மாறாத பங்காளியாக இருந்து வருகிறது. எமது பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்து, நெருக்கடியான காலங்களில் அத்தியாவசிய உதவிகளை வழங்கி, நாங்கள் ஸ்திரத்தன்மையையும் வளர்ச்சியையும் அடையும்போதும் எங்களுடன் நின்றது.

2022 ஆம் ஆண்டில் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது, இந்தியா எமக்கு கடன் வசதிகள், எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை வழங்கியது. இவற்றை நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம்.

இலங்கை தொடர்ச்சியாக ஒரே நிலைப்பாட்டில் உள்ளது. எமது பூமியை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகப் பயன்படுத்த நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றார். (ம-7)


## கல்யாணி நகை மாளிகை

வங்கியில் அடைவு வைத்த தங்க நகைகளை மீட்டு மிகுதிப் பணம் வழங்கப்படும்.

(C-4105)

**077 784 0379**

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



## விற்பனைக்கு

No 72, மானிப்பாய் இணுவில் பிரதான வீதியில் சுதுமலை வடக்கு மானிப்பாயில் 6 பரப்பு சுற்றிவர மதிலுடன் விற்பனைக்குண்டு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

Sivasakthy Palan (Jeeva)

**077 474 3499**

(1653)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 23.08.1945

மறைவு 16.10.2025

எமது பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக (கலாசார மத்திய நிலையம்) கடமையாற்றும் திருமதி இராசமலர் பரமேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்

### அமரர் சபாரத்தினம் இலட்சுமிப்பிள்ளை

அவர்கள் 16.10.2025 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-4126)


# தீபாவளி திருநாளை முன்னிட்டு

## பருத்தித்துறையில்

மாபெரும்

# மலிவு விற்பனை



| | |
|---|---|
| 2 சாரம் | - 700 /= |
| 2 சேட் | - 2000 /= |
| 2 சேட் | - 2500 /= |
| 2 கவுண் | - 1500 /= |
| ரொப் & பிளாசா | - 1200 /= |



உங்கள் திருப்தியே எங்கள் நிறைவு

MEGA OFFER

# தோழன் ஆடையகம்

இல.161, பிரதான வீதி (பஸ் நிலையம்), பருத்தித்துறை.

தொ.பே: 021 226 1859 | 077 2225385 | 077 3151654

(C-4130)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 4 லட்சத்தை தாண்டியது தங்கத்தின் விலை!

(கொழும்பு)

**நாளுக்கு நாள் புதிய சாதனைகளை முறியடித்துச் செல்லும் தங்கத்தின் விலையானது நேற்று வெள்ளிக்கிழமை மற்றொரு முக்கியமான வரம்பைத் தாண்டியது.**

அமெரிக்கா-சீனா வர்த்தக உறவுகள் குறித்த கவலைகள் அதிகரித்து வருவதும் தங்கத்தின் விலையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அத்துடன் முதலீட்டாளர்கள் மத்தியில் தங்கம் வாங்கும் ஆர்வம் அதிகரிப்பதற்கு, அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கி இந்த ஆண்டு அதிக வட்டி விகிதக் குறைப்பை மேற்கொள்ளக்கூடும் என்ற வதந்திகளும் காரணம் என்றும் கூறப்படுகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை தங்கக் கட்டியின் விலை 1.2 சதவீதம் உயர்ந்து ஒரு அவுன்ஸ் $4,379.93 ஆக உயர்ந்து, 30 டிரில்லியன் டொலர் சந்தை மூலதனத்தை எட்டியது. இது 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதன் அதிகபட்ச வாராந்திர இலாபத்தைப் பதிவு செய்யும் சந்தர்ப்பமாகும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தங்கத்தின் விலை 165.61 சதவீதம் உயர்ந்துள்ளதாக ஸ்பெக்டேட்டர் இன்டெக்ஸின் தரவுகள் தெரிவிக்கின்றன.

புவிசார் அரசியல் மற்றும் வர்த்தக பதற்றங்கள், அதிகரித்து வரும் நிதி மற்றும் கடன் அளவுகள் மற்றும் அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கியின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்கள் ஆகியவற்றின் மத்தியில் இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ளியின் விலையும் இந்த வாரம் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்தது.

அதன்படி, அதன் விலை வெள்ளிக்கிழமை ஒரு அவுன்ஸ் $54.3775 ஆக புதிய உச்சத்தை எட்டியது.

இலங்கையில் நேற்று 24 கரட் தங்கம் ஒரு பவுணின் விலையானது 410,000 ரூபாவாக காணப்படுகின்றது. அதேநேரம், 22 கரட் தங்கத்தின் விலையானது 379,200 ரூபாவாக காணப்படுவதாக அகில இலங்கை நகைகள் விற்பனையாளர் சங்கப் பொதுச் செயலாளர் ஆர்.பாலசுப்ரமணியம் தெரிவித்துள்ளார். (நி)

## மஹாபொல புலமைப்பரிசில்; விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(கொழும்பு)


2024/2025 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக் கழகத்துக்குத் தகுதி பெற்ற மாணவர்களுக்குரிய மஹாபொல புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்குரிய கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

## 24 மணி நேரத்தில் ஏழு வீதி விபத்துக்கள்

### எட்டு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)




24 மணி நேரத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற ஏழு வீதி விபத்துகளில் எட்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை, சுன்னாகம், மதவாச்சி மற்றும் கடவத்தை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் மொத்தமாக 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் அநுராதபுரம் வீதியில் உள்ள எரியகம பகுதியில் வான் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து, மரம் ஒன்றில் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் புத்தளத்தில் ஒருவரும் கம்பஹாவில் ஒருவரும் உயிரிழந்தனர்.

குறித்த விபத்துகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## போதைப்பொருளுடன் கைப்பற்றப்பட்ட படகு

(கொழும்பு)

இலங்கைக்கு தெற்கே உள்ள சர்வதேச கடற்பரப்பில் போதைப்பொருட்களை ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் பல நாள் மீன்பிடிப் படகு ஒன்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தற்சமயம் குறித்த படகு காலி துறைமுகத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இதன்போது படகில் இருந்த 5 பேர் கைது செய்யப்பட்டதாகவும் ஆரம்பக் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## ஒரு நாளில் மட்டும் 5 ஆயிரம் பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5,221 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பில் 17 பேரும், சந்தேகத்தின் பேரில் 630 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 299 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 153 பேரும், மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 88 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 14 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4020 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

முல்லைத்தீவு மாவட்ட பெண் சாரணிய ஆணையாளர்

திருமதி. நீலலோஜினி தர்மகுலசிங்கம்

அவர்கட்கு அகில இலங்கை பெண் சாரணிய மன்றம் (கொழும்பு) 27.09.2025 அன்று நடாத்திய வருடாந்த பொதுக்கூட்டத்தில்

25 வருட Service Bar விருது

தலைமைத்துவ விருது

என இரு விருதுகளைப் பெற்றுள்ளார். இவருடைய சேவை இன்னும் தொடர எங்கள் வாழ்த்துக்கள்







வாழ்த்துவோர் :

சாரணிய சேவையினர்

முல்லைத்தீவு மாவட்டம்


(5679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வை அறிவித்தார்

## மல்யுத்த வீரர் ஜோன்சீனா

## சோகத்தில் ரசிகர்கள்




பிரபல WWE வீரர் ஜோன்சீனா, ஓய்வு பெறவுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

17 முறை உலக சம்பியனான இவர், WWE வரலாற்றில் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

அண்டர்டேக்கர், தி ராக் மற்றும் ப்ரோக் லெஸ்னர் போன்ற சூப்பர் ஸ்டார்கள் இருந்த காலத்திலும் கூட, WWE அடையாளத்தை முன்னோக்கிக் கொண்டு சென்ற முக்கிய நபர்களில் ஜோன்சீனாவும் ஒருவர்.

ஜோன்சீனா ஒரு மல்யுத்த வீரராக மட்டுமல்லாமல் ஒரு ஹொலிவூட் நட்சத்திரமாகவும் தனக்கென ஒரு பெயரைப் பெற்றுள்ளார்.

இந்தநிலையில் எதிர்வரும் டிசம்பர் 13ஆம் திகதியோடு ஜோன்சீனா ஓய்வு பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வோஷிங்டன் நகரில் அமெரிக்க நேரப்படி டிசம்பர் 13ஆம் திகதி இரவு 7.30 அளவில் ஜோன்சீனாவின் இறுதி போட்டி நடைபெறும் என WWE நிர்வாகம் அறிவித்துள்ளது.

அதற்கான ரிக்கெட் முற்பதிவுகள் தொடங்கிய நிலையில், ஜோன்சீனா விடைபெறுவதை நினைத்து அவரது ரசிகர்கள் சோகத்துடன் புகைப் படங்கள், காணொளிகளைப் பகிர்ந்து வருகின்றனர். (3)

# மகளிர் உலகக் கிண்ணம்

## முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது அவுஸ்திரேலியா




13ஆவது மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்நிலையில், விசாகப்பட்டினத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 198 ஓட்டங்கள் எடுத்தது.

அந்த அணியின் சோபன மாஸ்ட்ரே அரைச்சதம் கடந்து 66 ஓட்டங்களும், ரூபியா ஹெய்டர் 44 ஓட்டங்களும் எடுத்தனர்.

அவுஸ்திரேலியா சார்பில் ஆஷ்லே கார்ட்னர், அனபெல் சதர்லேண்ட், ஆலனா கிங், ஜார்ஜியா ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 199 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் அவுஸ்திரேலிய அணி களமிறங்கியது. ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடியது.

கப்டன் அலீசா ஹீலி, லிட்ச்பீல்டு ஆகி யோர் பங்களாதேஷ் பந்துவீச்சை அடித்து நொறுக்கினர். அலீசா ஹீலி சதம் கடந்தார். லிட்ச்பீல்டு அரைச்சதம் கடந்தார்.

இறுதியில், அவுஸ்திரேலியா அணி 24.5 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 202 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகளில் 4இல் வெற்றி பெற்று 9 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கிறது.

இந் நிலையில் அவுஸ்திரேலிய அணி முதல் அணியாக அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (3)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 19 - 06 - 1949 |  | 17 - 10 - 2025 |

## பராசக்தி விஜயரத்தினம்

மணல் ஒழுங்கை, புலோலி மேற்கு, திருநாவலூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி விஜயரத்தினம் அவர்கள் நேற்று *(17.10.2025)* வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (ஓய்வுநிலை அதிபர்) - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தியாகராசா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் தியாகராசா விஜயரத்தினம் (ஓய்வுநிலை வங்கி முகாமையாளர், இலங்கை வங்கி) அவர்களின் அன்பு மனைவியும் அமரர் நல்லம்மாவின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்புப் பெறாமகளும் அமரர் திருச்செல்வம் (ஓய்வுநிலை தபாலதிபர்), வசந்தாதேவி (ஓய்வுநிலை ஆசிரியர்), விக்னேஸ்வரன் (கனடா), அமரர் ஜெயதேவி மற்றும் சோமாஸ்கந்தன் (ஓய்வுநிலை மருந்தாளர்), சிவகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுரேஷ் (கனடா), சுஜாதா, விஜிதா (கனடா), சபேஷ் (ஸ்ரீ அம்பாள் எலக்றிக்கல்ஸ்), சதீஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலகுமாரி (கனடா), கதிரமலை (ஆசிரியர், யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்), லஜீபன் (கனடா), சுகந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் விஷ்ணுஜி, கிருஷ்ணி, அபிஷ்ணவி, ஜசோபா, கிருஷிகா, கிருத்திகா, லஸ்மினி, கிருஷனா, அனிஷ்கா, அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(19.10.2025)* ஞாயிற்றுக்கிழமை நண்பகல் *12.00* மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சபேஷ் (மகன்) - 077 982 7995**
**சுஜாதா (மகள்) - 077 043 5767**

(C-4131)

**தகவல் : குடும்பத்தினர்**
**திருநாவலூர்**

## 13 ஆவது...

இல்லை என்பதே உண்மை என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சுவிஸ்லாந்தில் இடம் பெற்ற சமஷ்டி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட போது சுவிஸ் அரசாங்கம் சமஷ்டித் தீர்வினை தமிழ் மக்களுக்கு வழங்க இருப்பது போன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

ஆனால் உண்மை அதுவல்ல அங்கே பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் தலைவர்களை சுவிஸ் அரசாங்கம் அழைத்தது சமஷ்டி தொடர்பான ஒரு கற்பித்தலை வழங்குவதற்கு மாத்திரமே தவிர வேறு எதற்கும் அல்ல.

அங்கு அதிகம் வந்தவர்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள். எனவே அவர்கள் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் முன்வைக்கப்பட்ட யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விடயங்களை முன்கொண்டு செல்வதாக தெரிவித்தார்கள்.

ஆனால் அது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரையும் அவர்கள் முன்னெடுக்கவில்லை. எனவே இதனை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அத்துடன் 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி எமக்கு கிடைக்கின்ற குறைந்தபட்ச அதிகாரமான மாகாண சபைத் தேர்தலை நடத்தி அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதனால் மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும். நாங்கள் அதிலே போட்டியிடுவோம்.

தேர்தல் தொடர்பில் பேசப்பட வேண்டும் என்று கூறுகிற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் 13ஆம் திருத்தச் சட்டம் தேவையில்லை எனக் கூறி வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் அவர்களுக்கு சரியான கருத்துக்கள் இல்லை என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயுற்ற சிறுவர்களின் புகைப்படங்களை முகப்புத்தகத்தில் வெளியிட்டு நிதி மோசடி

## மூவர் கைது

(கொழும்பு)

மஹரகம அபேக்ஷா புற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் சிறுவர்களின் புகைப்படங்களை மோசடியாகப் பெற்று முகப்புத்தகத்தில் வெளியிட்டு இலட்சக்கணக்கான ரூபாய்களை மோசடி செய்த ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கும்பலைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கையானது, குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்போது, இந்த மோசடிக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு நவீன கையடக்க தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடவத்தை, ஜாஎல மற்றும் கிரிபத்கொட பகுதிகளில் வசிக்கும் சிறுவர்களின் சட்டபூர்வ பெற்றோர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இணைய கண்காணிப்பு மற்றும் புலனாய்வு பிரிவுக்கு செய்த முறைப்பாட்டுக்கு அமைய இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, நீண்ட விசாரணையைத் தொடர்ந்து, மோசடியில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இந்த ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல், சம்பந்தப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் பல்வேறு மத மையங்களுக்கு சென்ற புகைப்படங்களையும் மோசடியாக பெற்று, "தங்கள் குழந்தைகள் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்து, தயவுசெய்து என் குழந்தைக்கு உதவுங்கள். என் மகனின் வயதுடைய மற்ற குழந்தைகள் பாடசாலை சென்று விளையாடுகிறார்கள். ஆனால் என் மகன் படுக்கையில் படுத்து கஷ்டப்படுகிறான்" போன்ற பல் வேறு சொற்றொடர்களைப் பயன்படுத்தி, பொதுமக்களின் உணர்வுகளைத் தூண்டும் வகையில், இந்த மோசடியை சில காலமாகச் செய்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. (நி)

# கடற்படை ஏவுகணை கட்டளையின் கொடி அதிகாரியாக தனேஷ் பத்பேரிய



(திருமலை)

கடற்படை ஏவுகணை கட்டளையின் கொடி அதிகாரியாக நியமிக்கப்பட்ட கொமடோர் தனேஷ் பத்பேரிய ஒக்டோபர் 14 ஆம் திகதி திருகோணமலை கடற்படை நிறுவனத்தில் உள்ள கொடி அதிகாரி கடற்படை ஏவுகணை கட்டளை அலுவலகத்தில் அவர் பொறுப்பேற்றார்.

கடற்படை மரபுப்படி கடற்படை ஏவுகணை கட்டளைக்கு கொமடோர் தனேஷ் பத்பேரியவை வரவேற்ற பின்னர், கொடி அதிகாரி கடற்படை பிரதி ஏவுகணை கட்டளை அதிகாரியாக கடமையாற்றிய கொமடோர் பிரசன்ன ஹெட்டியாராச்சி, கொமடோர் தனேஷ் பத்பேரியவிடம் குறித்த பதவிக்கான கடமைகளை ஒப்படைத்தார். (நி)

# 175ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.போதனாவில் முத்திரை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு 175 ஆவது வருட நிறைவைச் சிறப்பிக்கும் விசேட தபால் முத்திரை, முதல் நாள் உறை, முத்திரைச் சிறப்பிதழ் வெளியிடும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். போதனா மருத்துவமனையில் அமைந்துள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேலும் 175 ஆவது வருட ஞாபகார்த்தமாக யாழ். போதனா மருத்துவமனையில் உபதபால் அலுவலகம் ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# பணம் பறிக்கும் காகம் பரிதவிக்கும் மக்கள்




(களுத்துறை)

களுத்துறை பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு காகத்தினால் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடைகளுக்குள் நுழைந்து பணத்தை திருடுவது, மக்கள் மீது ஏறி நிற்பது போன்ற செயற்பாடுகளில் காகம் ஒன்று ஈடுபட்டு வருகிறது.

இந்தக் காகம் யாரோ ஒரு வீட்டில் வளர்க்கப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த காகம் வங்கிகளுக்கு அருகிலுள்ள கடைகள் மற்றும் பகுதிகளுக்குள் பறந்து பணத்தை எடுக்கிறது. கடை ஒன்றுக்குள் நுழைந்த காகம் அங்கிருந்து பணத்தை திருடிச் செல்லும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியிலுள்ள அலுவலகம் ஒன்றுக்கு சென்ற பெண் ஒருவரின் உடலில் காகம் ஒளிந்து கொண்டிருக்கும் புகைப்படம் ஒன்றும் வெளியாகியுள்ளது. (நி)


# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BIDS

**Provision of a Private Security Service for the University of Jaffna - 2026**

1. The Chairman, Department Procurement Committee of University of Jaffna invites sealed Bids from eligible and qualified bidder for Provision of a Private Security Service for the University of Jaffna.
2. Period of contract shall be a calendar year days subject to a performance evaluation period of 90 days from the start date.
3. Companies/ Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidence should be provided with Bids.
   - 3.1 To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have its registered office or sub office in Northern Province (closer to main premises) and shall possess the valid registration in the Ministry of Defence, Public Security, Law and Order, Business registration and a copy of the valid registration certificate in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance should be attached with the Bid.
   - 3.2 Average of annual volume of security service contracts performed in the last 3 years should be at least **Rs. 75 Million**
   - 3.3 Must have satisfactorily carried out at least one Security service contract to a Government Department/ Corporation/University during the last 3 years for not less than **Rs. 25.0 Million.**
4. The Company/ Firm must have satisfactorily carried out at least two security service contracts which included a minimum work force of **175 security staff** in each contract for any Government Department/ Corporation/ University or Institutions over the last three years. Certified copies of letters issued by such clients should be attached with the Bid.
5. Interested Bidders may inspect the Bidding documents and obtain further information from the Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day.
6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **4th November 2025** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of **Rs. 5000.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **University of Jaffna Branch People's Bank Account Number 970000060000276** at any Branch of People's Bank.
7. Duly completed sealed Bids shall be sent either by registered post to Chairman, Department Procurement Committee, University of Jaffna or deposited in the Tender Box maintained at Registrar's office on or before 2.00 p.m. on **11th November 2025.** Late Bids or incomplete Bids will be rejected.
8. Bids will be opened soon after closing time in the presence of the Bidders or their representatives who choose to attend.
9. All Bids shall be accompanied by a Bid Security (Unconditional Guarantee) of Rupees Five hundred thousand only **(Rs. 500,000.00).** (Valid up to 02nd March 2026)
10. Pre-bid meeting will be held at **10.00 am on 31st October 2025** in the board room of the University of Jaffna, Thirunelvely.

**The Chairman/ Department Procurement Committee**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna.**
**18.10.2025**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக பாதுகாப்பிற்கான தேசிய விருது யாழ்.மாவட்டம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

சமூக பாதுகாப்பிற்கான தேசிய விருது வழங்கும் நிகழ்வு இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருகோணமலை தனியார் ஹொட்டலில் நடைபெற்றது.



இவ்விருது வழங்கும் நிகழ்வில் யாழ்.மாவட்டம் பயனாளிகள் இணைப்பின் அடிப்படையிலும் பணச் சேகரிப்பின் அடிப்படையிலும் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இவ் விருதினை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பெற்றுக்கொண்டார்.

இவ்விருது வழங்கும் நிகழ்வில் பணச்சேகரிப்பின் அடிப்படையில் தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் முறையே பருத்தித்துறை, நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்கள் பெற்றுக் கொண்டன.

மேலும் கோப்பாய், உடுவில், கரவெட்டி, சாவகச்சேரி, வேலணை, தெல்லிப்பளை, சங்கானை பிரதேச செயலகங்களும் தேசிய விருதிற்கான தகுதியினைப் பெற்று தேசிய விருதிற்கு தெரிவாகி இருந்தன. தனிப்பட்ட அடைவு மட்டங்களிற்கான தேசிய விருதினை 29 கிராம மட்ட உத்தியோகத்தர்களான கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந் நிகழ்வு இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சிரேஷ்ட இணைப் பதிகாரி பா.பிரதீபனால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-33)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு 24 மோட்டார் சைக்கிள்கள், 5 வாகனங்கள், 2 ஆட்டோ, 2 கை உழவு இயந்திரங்கள் என்பன ஏல விற்பனை செய்யப்படும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# யாழ்.கோட்டை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியில் யாழ்ப்பாணக் கோட்டையை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், கோட்டையின் அபிவிருத்தியின் தேவைப்பாடு தொடர்பில் வலியுறுத்தினார். நகர அபிவிருத்தி அதிகார சபையால் கோட்டையின் அபிவிருத்தி தொடர்பில் தயாரிக்கப்பட்ட திட்டமுன்மொழிவும் முன்வைக்கப்பட்டது. திட்டத்தை தொடங்குவதற்கான தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு புத்தசாசன சமய கலாசார அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலருடன் விரிவான கலந்துரையாடல் நடத்துவதற்கு குறித்த கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர், தொல்பொருள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், உலக வங்கிக் குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைசார் சிரேஷ்ட விரிவுரையாளர் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்கள் பங்கேற்றிருந்தனர். (8)

# சுவிஸ் தூதுவர்-சிறீதரன் எம்.பி சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான சுவிஸ் நாட்டின் தூதுவர் ஸ்ரீ வோல்ற் மற்றும் சுவிஸ் தூதரகத்தின் முதல் செயலாளர் ஜஸ்ரின் பொய்யிலற் ஆகியோரை அண்மையில் இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் சுவிஸ் தூதரக த்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணை, சமகால அரசியல் நிலைமைகள், மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் பொறுப்புக்கூறல் நடவடிக்கையின் தொடர் செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (8-104)

# வேலணையில் பனம் விதைகள் நாட்டல்



(அராலி)

தீவகத்தின் அடையாளத்தை பாதுகாத்து பசுமையை உருவாக்கவும் பனை மரங்களின் பாதுகாப்பை உறுதி செய்து நன்னீர் வளங்களைப் பாதுகாக்கவும் வேலணை பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான பனம் விதைகள் நாட்டப்பட்டன.

குறித்த திட்டம் நேற்றைய தினம் வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட அல்லைப்பிட்டி பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

அல்லையூர் இளைஞர்களின் ஏற்பாட்டில் வேலணை பிரதேச செயலகம் மற்றும் வேலணை பிரதேச சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பிரதேச சபையின் உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டு பனம் விதைகளை நாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-33-104)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து டிப்பர் வாகனம் விபத்து

## சாரதி காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற டிப்பர் விபத்தில் சாரதி காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

சங்கத்தானை பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற குறித்த விபத்து தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சி பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கற்களை ஏற்றி வந்த டிப்பர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, சங்கத்தானைப் பகுதியில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியுடனும் கடையொன்றுடனும் மோதி தனது இயக்கத்தை நிறுத்தியது.

குறித்த விபத்தில் டிப்பர் சாரதி காயமடைந்த நிலையில், அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)

# நூல் அறிமுகமும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

"சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு" எனும் நூல் அறிமுகமும் கலந்து ரையாடலும் இன்று சனிக் கிழமை காலை 10.30 மணிக்கு நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் கோபால கிருஷ்ணன் பிரவீன்ராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், நூல் அறிமுகவுரையினை அபிநயா சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதுடன் யாழிலிருந்து மலையகம் எனும் நூல் வாசிப்பு அனுபவம் பற்றி குணகீதன் மதுராங்கி நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வில் மலையக மக்கள் எனும் தலைப்பில் சிறப்புரையினை எழுத்தாளர் இரா.சடகோபன் [illegible] குறிப்பிடத்தக்கது. (8)

# கடலட்டைகளை எடுத்துச் சென்ற இரு சந்தேக நபர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமாக கடலட்டைகளை எடுத்து சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் , பொலிஸ் விசேட அதிரடி படையினருடன் இணைந்து அண்மையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது வேலணை, துறையூர் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த வாகனத்தை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது, செல்லுபடியற்ற அனுமதி பத்திரத்துடன் சட்டவிரோதமான முறையில் பிடிக்கப்பட்டஆயிரத்து 240 கடலட்டைகளை வாகனத்தில் எடுத்து செல்லப்படுவதனை கண்டறிந்து வாகனத்தில் பயணித்த அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் மீட்கப்பட்ட கடலட்டைகளையும் அவற்றை எடுத்து சென்ற வாகனத்தையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்(வ-து)

## A32 வீதி, மட்டுவில்நாடு மேற்கு, பூநகரி.

## பதிவு இலக்கம் -PA/51 09.03.1972

## பதவி வெற்றிடங்களிற்கான விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

எமது சங்கத்தில் வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளிற்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்ப படிவத்தினை சங்க வேலை நாட்களில் தலைமைகாரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **தலைவர், பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்(வ-து), A32 வீதி, மட்டுவில்நாடு மேற்கு, பூநகரி.** என்னும் முகவரியில் 31.10.2025ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்க வேண்டும்.

**01.பதவி - கிளை மேற்பார்வையாளர் - 207/11**
**சம்பள அளவுத்திட்டம் - 34280-580X10-640X10-800X10-54480**
**411360-6960X10-7680X10-9600-435600**

**வெற்றிடங்கள் - 01**

அ)கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர் / கிளை மேற்பார்வையாளர் / கிளை முகாமையாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். /

கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம். / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**02.பதவி - காசாளர் - 306/12**
**சம்பள அளவுத்திட்டம் - 33820-550X10-610X10-770X10-53120**
**405840-6600X10-7320X10-9240X10-429000**

**வெற்றிடங்கள் - 01**

அ)கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ)கூட்டுறவு ஊழியர் உயர்தர பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடன் சித்தி

அல்லது

இ)கூட்டுறவு ஊழியர் சாதாரணதர பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண பத்திரப்பரீட்சையில் இரு அமர்வுகளிற்கு மேற்படாது சிங்களம்/தமிழ், கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 03 திறமை சித்தியுடன் கூடிய 06 பாடங்களிற்கான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**03.பதவி - கணக்கு பதிவாளர் - 215/10**
**சம்பள அளவுத்திட்டம் - 34745-610X10-670X10-830X10-55845**
**416940-7320X10-8040X10-9960X10-442260**

**வெற்றிடங்கள் - 01**

அ)கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் கணக்குப் பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர்/ எழுதுநர் / காசாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். /

கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் கணக்குப் பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர்/ எழுதுநர்/காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ)இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா / இதற்குச்சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ)கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**04. பதவி - எழுதுநர் - 302/12**
**சம்பள அளவுத்திட்டம் - 33820-550X10-610X10-770X10-53120**
**405840-6600X10-7320X10-9240X10-429000**

**வெற்றிடங்கள் - 01**

அ)கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் எழுதுநர்/கணக்காய்வு எழுதுநர்/ காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் எழுதுநர் / காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ)அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப் நிறுவனமொன்றில/பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல/ கணக்குப்பதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.

ஈ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சிங்களம்/ தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**05. பதவி - எழுதுநர் - 302/13**
**சம்பள அளவுத்திட்டம் - 33360-520X10-580X10-740X10-51760**
**400320-6240X10-6960X10-8880X10-422400**

**வெற்றிடங்கள் - 02**

அ) கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுநர்/காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**06. பதவி - வங்கி எழுதுனர் - 302/13**
**சம்பள அளவுத்திட்டம் - 33360-520X10-580X10-740X10-51760**
**400320-6240X10-6960X10-8880X10-422400**

**வெற்றிடங்கள் - 01**

அ) கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத் திட்டப்பதவியில் காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். /

கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுநர் / காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**07. பதவி - களஞ்சிய முகாமையாளர் /கிளை முகாமையாளர் - 208/12**
**சம்பள அளவுத்திட்டம் - 33820-550X10-610X10-770X10-53120**
**405840-6600X10-7320X10-9240X10-429000**

**வெற்றிடங்கள் - 05**

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/

க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/

க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளிற்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி உட்பட 03 திறமை சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**08. பதவி - விற்பனை உதவியாளர் - 308/16**
**சம்பள அளவுத்திட்டம் - 31975-390X10-490X10-650X10-47275**
**383700-4680X10-5880X10-7800X10-402060**

**வெற்றிடங்கள் - 03**

அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**09. பதவி - சாரதி 312/14**
**சம்பள அளவுத்திட்டம் - 32900-490X10-550X10-710X10-50400**
**394800-5880X10-6600X10-8520X10-415800**

**வெற்றிடங்கள் - 01**

அ) 05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து / லொறி/ பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**10. பதவி - கணனிப்பக்க உருவாக்குநர் 322/11**
**சம்பள அளவுத்திட்டம் - 34280-580X10-640X10-800X10-54480**
**411360-6960X10-7680X10-9600-435600**

**வெற்றிடங்கள் - 01**

அ)கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணனிப்பக்க உருவாக்குநர் பதவியில் 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணனிப்பக்க உருவாக்குநர் பதவியில் 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ)க.பொ.த.சாதாரணதரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்கம்/தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தியுடன் அரச/ அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழு நேர MS OFFICE / அதனையொத்த கணனி பாட நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

இ)அரச/ அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழு நேர கணனி பாட நெறிக்கான சான்றிதழ் அத்துடன் இப்பதவியில்/ அதனையொத்த பதவியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**11. பதவி - காவலாளி - 315/15**
**சம்பள அளவுத்திட்டம் - 32435-460X10-520X10-680X10-49035**
**389220-5520X10-6240X10-8160X10-409140**

**வெற்றிடங்கள் - 01**

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) 05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**12. பதவி - அலுவலக உதவியாளர் 317/15**
**சம்பள அளவுத்திட்டம் - 32435-460X10-520X10-680X10-49035**
**389220-5520X10-6240X10-8160X10-409140**

**வெற்றிடங்கள் - 01**

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01ஆண்டு கால அனுபவம்.

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்./08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**ஏனைய விபரங்கள்**

- வயதெல்லை 18-45 (சங்கபணியாளர்களிற்கு இவ் வயதெல்லை பொருந்தாது)
- விண்ணப்பம் முடிவுத் திகதி 31.10.2025 வெள்ளிக்கிழமை.
- இப்பதவிகளிற்குரிய அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களிற்கு அமைய இதர படிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- சங்க எல்லைப் பரப்பில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்


சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி கல்வித்தகைமை சான்றிதழ், சேவை தகைமை சான்றிதழ், வதிவிட உறுதிப்படுத்தல் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை இணைத்து **தலைவர், பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து), யு32 வீதி, மட்டுவில்நாடு மேற்கு, பூநகரி.** என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 31.10.2025ஆம்திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடைமையாற்றும் ஊழியர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்

**திரு.க.சமீஸ்வரன்,**
**தலைவர்,**
**பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து),**
A32 வீதி, மட்டுவில்நாடு மேற்கு, பூநகரி.

(C-4123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணைக் கொலைக்கு உருகுவேயில் அனுமதி



(மாண்டிவிடியோ)

தென் அமெரிக்க நாடான உருகுவேயில், தீவிர நோய் மற்றும் மன நலம் பாதிக்கப்பட்டவர்களை குடும்பத்தினர் விருப்பப்படி கருணைக் கொலை செய்வதற்கான அனுமதி வழங்கவேண்டும் என, நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது.

இதன்படி, தலைநகர் மாண்டிவிடியோவில் உள்ள செனட் சபையில் இந்த மசோதா நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

கீழ்சபை இதற்கு ஒப்புதல் அளித்திருந்தது. மேல்சபையில் மசோதாவை கொண்டு வந்த போது, 31 எம்.பிக்களில் 20 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.


இந்த சட்டம், மருத்துவ நிபுணரால் மேற்கொள்ளப்படும் கருணைக் கொலையை அனுமதிக்கிறது.

ஆனால், நோயாளி தானே மருந்து எடுத்துக்கொண்டு தற்கொலை செய்து கொள்வதை அனுமதிக்கவில்லை.

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் கருணைக் கொலையை தேர்ந்தெடுக்க விரும்பினால், இரண்டு மருத்துவர்கள் அவர்களின் மனநல தகுதியை உறுதிசெய்ய வேண்டும். பெல்ஜியம், கொலம்பியா, நெதர்லாந்து போல் அல்லாமல், உருகுவேயில், 18 வயதுக்குக் கீழ் உள்ளவர்களை கருணைக்கொலை செய்ய அனுமதி வழங்கப்படவில்லை. (நி)

# உக்ரைன் போர் குறி

## ஹங்கேரியில் சந்திக்க



**(புடாபெஸ்டில்) –**
**உக்ரைனில் ந**
**மோதல் குறித்து**
**செலுத்துவதற்காக**
**தலைநகர் புடாபெஸ்**
**ஜனாதிபதி விளாடி**
**சந்திக்க அமெரிக்க**
**டொனால்ட் ட்ரம்ப்**
**தெரிவித்துள்ளார்.**

இரு தலைவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுமார் இரண்டரை மணி நேரம் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலைத்தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தொலைபேசி உரையாடலில் இரு தலைவர்களும் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியதாக கூறப்படுகிறது.

இந்த உரையாடலானது மிகவும் ஆக்கப்பூர்வமானதாக இருந்ததாக ட்ரம்ப் விவரித்தார்.

உக்ரைனுக்கு புதிய ஆயுத உதவிகளை அமெரிக்கா

## கனடா, அமெரிக்க விமான நிலையங்களை ஹேக் செய்த ஹமாஸ் ஆதரவாளர்கள்

(வோஷிங்டன்)

கனடா மற்றும் அமெரிக்கா விமான நிலையங்களின் பொது அறிவிப்பு பலகைகளை ஹேக் செய்த மர்ம நபர்கள், ஹமாஸுக்கு ஆதரவாகவும், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராகவும் செய்திகளை வெளியிட்டதால் பரபரப்பு நிலவியது.

இஸ்ரேல், ஹமாஸ் இடையே 2 ஆண்டுகளாக நடந்து வந்த போர், கடந்த ஒக்டோபர், 10 ஆம் திகதி முதல் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வந்ததில் அமெரிக்க ஜனாதிபதிட்ரம்பின் பங்கு அளப்பரியது. இந்தப் போர் நிறுத்தத்திற்கு உடன்பட மறுத்த ஹமாஸை, ஜனாதிபதி ட்ரம்ப் கடுமையாக எச்சரித்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் ஹாரிஸ்பர்க் சர்வதேச விமான நிலையம், கனடாவின் கெலோனா, விக்டோரியா மற்றும் வின்ட்சர் சர்வதேச விமான நிலையங்களின் பொது அறிவிப்பு பலகைகளை ஹமாஸ் ஆதரவாளர்கள் ஹேக் செய்துள்ளனர்.

அதில், ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாகவும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராகவும் செய்திகளை வெளியிட்டதால் பெரும் பரபரப்பு நிலவியது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

சைபர் கிரைம் பொலிஸார் மற்றும் விமான நிலைய அதிகாரிகளின் உதவியுடன் பொது அறிவிப்பு பலகையை மீண்டும் தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். (நி)



# இருமுனைப் போ

## பாகிஸ்தானின் சர்ச்

(இஸ்லாமாபாத்)

தலிபான்களுடனான எல்லைப் பதட்டங்கள் அதிகரித்து வரும் நிலையில், இரு முனைப் போருக்கு நாடு தயாராக இருப்பதாக ஒரு தொலைக்காட்சி நேர்காணலின் போது கூறிய பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப், மீண்டும் ஒரு சர்ச்சையைத் தூண்டியுள்ளார்.

இந்திய எல்லையில் பதட்டங்கள் தீவிரமடைவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நேர்காணலில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "பாகிஸ்தான் இரு முனைப் போருக்குத் தயாராக உள்ளது" என்று கூறினார்.

அத்துடன், இந்தியா எல்லையில் மிலேச்சத்தனமாக விளையாட வலுவான வாய்ப்புகள் இருப்பதாகவும் எச்சரித்த அவர், இஸ்லாமாபாத் ஏற்கனவே பதிலடி கொடுப்பதற்கான உத்திகளை வகுத்துள்ளதாகவும் கூறினார்.

பின்னர் அறிவிப்பாளர், "இரு முனைப் போர் வெடித்தால், அதை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து பிரதமருடன் ஏதேனும் விவாதித்தீர்களா?" என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு கவாஜா ஆசிப், ஆம், உத்திகள் நடைமுறையில் உள்ளன. அவற்றைப் பற்றி நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

# குறித்து விவாதிக்க

## க்கவுள்ள ட்ரம்ப் - புடின்

ஸ்டில்)

னில் நடந்து வரும் குறித்து கவனம் ற்காக, ஹங்கேரி டாபெஸ்டிலில் ரஷ்ய பிளாடிமிர் புடினை மரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விருப்பம் ார்.



க கூறப்

மிகவும்

ந்ததாக

ஆயுத

மரிக்கா

வழங்கவிருக்கும் என்ற ரஷ்யாவின் சந்தேகம் வலுப்பெறும் நிலையில் இந்த மாநாடு பற்றிய விபரங்கள் வெளிவந்துள்ளன.

ரஷ்யா அந்த மாநாடு நடைபெறுவது குறித்து உறுதி செய்துள்ளது.

ஆனால் அதன் திகதி பற்றிய விபரங்களை இருதரப்பும் குறிப்பிடவில்லை.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி, இராணுவ உதவிகளை நாடி அமெரிக்கா செல்லவிருக்கும் வேளையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)

# போருக்கு தயார்!

## ர்ச்சைக் கருத்துக்கள்

றையைப்

ள்ளது"

லையில்

ளையாட

இருப்

அவர்,

பதிலடி

திகளை

ார்.

, "இரு

, அதை

என்பது

தேனும்

கேள்வி

, ஆம்,

றையில்

றி நான்

பொதுவில் விவாதிக்க முடியாது, ஆனால் எந்தவொரு நிகழ்வுக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று பதிலளித்தார்.

முந்தைய அறிக்கையில், ஆசிப், ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசாங்கம் இந்தியா சார்பாக "ஒரு மறைமுகப் போரை" நடத்துவதாகக் குற்றஞ்சாட்டியும் உள்ளார்.

இஸ்லாமாபாத் மற்றும் காபூல் இடையே எல்லை தாண்டிய மோதல்களில் பல வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, 48 மணி நேர போர் நிறுத்தம் கடந்த புதன்கிழமை இரவு அமுலுக்கு வந்தது.

இரு அண்டை நாடுகளுக்கும் இடையே ஒரு வாரமாக நீடித்த வன்முறையைத் தொடர்ந்து தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டது.

பாகிஸ்தானுடனான அதன் தெற்கு எல்லையின் சில பகுதிகளில் தலிபான்கள் தாக்குதலைத் தொடங்கினர், இதனால் இஸ்லாமாபாத் அதன் சொந்த வலுவான பதிலடியை உறுதியளித்தது.

பாகிஸ்தான் தலிபான் தலைமையிலான பயங்கரவாதக் குழுக்களை ஆப்கானிஸ்தான் தனது மண்ணில் வைத்திருப்பதாக இஸ்லாமாபாத் குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் காபூல் அதனை மறுக்கிறது. (நி)



# அமெரிக்க மிரட்டலுக்கு இந்தியா அடிபணியாது

## ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை நிறுத்த மாட்டோம்

## இந்தியா பகிரங்கம்



(டில்லி)

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதாக பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்துள்ளார் என, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்த சில மணி நேரங்களில் மத்திய அரசு பதிலடி தந்துள்ளது. "நுகர்வோரின் நலன்களை பாதுகாப்பதே இந்தியாவின் முன்னுரிமை. எனவே, எரிசக்தி இறக்குமதி கொள்கையில் மாற்றம் செய்ய முடியாது" என, இந்திய மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. கடந்த 2022 பெப்ரவரி முதல் ரஷ்யாவுக்கும், கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும் இடையே போர் நடந்து வருகிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் களமிறங்கின.

ரஷ்யா மீது பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன.

இதையடுத்து, ரஷ்யாவிடம் மேற்கொண்டு வந்த கச்சா எண்ணெய் உள்ளிட்ட வர்த்தக தொடர்புகளை இந்நாடுகள் தவிர்த்து வருகின்றன. இதனால், ரஷ்யா உற்பத்தி செய்யும் கச்சா எண்ணெயை தள்ளுபடி விலையில் இந்தியா உள்ளிட்ட அதன் நட்பு நாடுகளுக்கு வழங்கி வருகிறது.

இந்த கச்சா எண்ணெய் ஏற்றுமதியால் கிடைக்கும் நிதியை, உக்ரைனுக்கு எதிரான போருக்கு ரஷ்யா பயன்படுத்தி வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றஞ்சாட்டியிருந்தார்.

மேலும், ரஷ்யாவின் வருவாயை தடுக்கும் வகையில், அந்நாட்டிடம் இருந்து அதிகளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நம் நாட்டின் மீது கூடுதல் வரி விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார்.

மேலும், இவ்வரி விதிப்பை ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கான அபராதம் என குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் கச்சா எண்ணெய் வர்த்தகத்தை தடுக்க, தொடர்ந்து இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு பல்வேறு வகைகளில் ட்ரம்ப் அழுத்தம் கொடுத்து வருகிறார்.

தன் நட்பு நாடுகளான ஐரோப்பிய நாடுகளையும் அவர் கூடுதல் வரி விதிக்குமாறு வலியுறுத்தி வருகிறார்.

இந்நிலையில், சமீபத்தில் வெள்ளை மாளிகையில் நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது பேசிய ட்ரம்ப், இந்திய பிரதமர் மோடி, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதாக தன்னிடம் உறுதி அளித்துள்ளதாக தெரிவித்து உள்ளார்.

எரிவாயு இறக்குமதி மேலும், இது குறித்து பேசிய ட்ரம்ப், "இதை அவரால் உடனடியாக செய்ய முடியாது. இது ஒரு சிறிய செயல்முறை தான். ஆனால், இந்த செயல்முறை விரைவில் முடிவடையும். இப்போது சீனாவையும் இதே காரியத்தை செய்ய வைக்க வேண்டும்" என தெரிவித்தார்.

இது குறித்து, இந்திய வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கை:

கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதியில் இந்தியா உலகளவில் குறிப்பிடத்தக்க இடம் வகித்து வருகிறது.

நிலையற்ற எரிசக்தி சூழலில் நுகர்வோரின் நலன்களை பாதுகாப்பதே இந்தியாவின் நிலையான முன்னுரிமை. எரிசக்தி இறக்குமதிக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பாதுகாப்பு அதிகாரிக்கு விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னியாராச்சியை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கு மாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை காலை உத்தரவிட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நெவில் வன்னியாராச்சி கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெவில் வன்னியாராச்சி சட்டவிரோத சொத்து சேர்ப்பு தொடர்பான விசாரணை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் ஒக்டோபர் 2 ஆம் திகதி முன்னிலையாகிய போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1987- இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி-பா- 15<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Electrical Engineer, Manager<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/16132 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16155 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>12இல்செவ்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்-Degree, Engineer (London)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/16133 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்-உத்தரட்டாதி<br>1இல்செவ்<br>கி-பா-26 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Physiotheropy, Therapist<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16157 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி-பா-40 1/4<br>12இல் செவ்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:HNDA<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16135 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்-பூசம்<br>கி.பா -32<br>உயரம்-5'3"<br>தகைமை/தொழில்: MLS<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/16159 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>8இல் செவ்<br>கி-பா-33<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: Draughsman, Repairing<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16136 | பிறப்பு-1989-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>12இல்சூரிசெவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் -O/L.தையல், ஆயமநரி எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16162 |
| பிறப்பு: 1986- இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: A/L, PHI<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16139 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>1இல்செவ்<br>கி.பா - 13 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - BSC, Project Assistant<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ: G/16176 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 463

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## ஆயுள் அதிகமாக

இந்தியாவிலே ஒரு மனிதனுடைய சராசரி ஆயுட்காலம்

ஆணுக்கு 67, பெண்ணுக்கு 70. அதுசரி. இதிலே ஏன் இந்த மூன்று ஆண்டுகள் வித்தியாசம்? ஆண்களின் ஆயுட்காலம் பெண்களைவிட மூன்று வருடங்கள் குறைவாக இருப்பதற்கு என்ன காரணம்?

ஒரு இதய நோய் சிகிச்சை நிபுணர் என்ன சொல்கிறார் என்றால், ஆண்களில் பலபேர் பீடி, சிகரெட் குடிக்கிறார்கள் அதுதான் காரணம் என்கிறார்.

மனிதனின் "ஆயுள்" என்கிறோம் மனிதனின் "வாழ்நாள்" என்கிறோம் இது இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு.

நோய் நொடி எதுவும் வராமல் இருந்தால் மனிதன் 80 வயதுக்கும் மேல் நல்லபடியாக வாழலாம்.

இது மனிதனுடைய வாழ்நாள்! Life Expectancy.

ஆனால் மனிதனுடைய ஆயுள் என்பது பரம்பரையைப் பொறுத்த விடயம். மரபு அணுக்களைப் பொறுத்த விடயம்!

இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்.

இந்த உலகத்திலே இருக்கின்றவர்கள். இன்னும் ஒரு 10, 15 வருடம் கூடுதலாக இங்கே வாழ வேண்டும் என்றால் அதற்கு ஏதாவது வழி உண்டா?

நவீன மருத்துவ ஆய்வுகள் அதற்கு 10 வழிகளைச் சொல்லி இருக்கிறார்கள்! அது என்ன என்பதை இப்போது பார்க்கலாம்!

முதலிலே. ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவை முழுமையாக மனநிறைவோடு சாப்பிடுங்கள்!

இரண்டாவது தினமும் ஒரே மாதிரியான உணவு வேண்டாம். நாளுக்கு நாள் சாப்பாடு வித்தியாசமாக இருக்கிறது நல்லது தினமும் பழம்,காய்கறிகள் அதிகமாகச் சாப்பிட வேண்டும்!

மூன்றாவது கருத்து வாரத்திற்கு இரண்டு தடவையாவது மீன் மாதிரியான கடல் உணவு நல்லதாம்.

சைவ உணவுக்காரர்கள் இதைக் காதிலே வாங்கிக்க வேண்டாம்!

நான்காவது கருத்து: மது அருந்த வேண்டாம்!

ஐந்தாவது கருத்து: தினமும் ஒரு வேளையாவது பால் சாப்பிடுங்கள்!

ஆறாவது கருத்து: என்ன என்றால் உடல் எப்பவும் இயங்கி கொண்டிருக்கின்ற மாதிரி ஏதாவது செய்துகொண்டே இருக்க வேண்டும். சும்மா சோர்ந்து போய் ஒரு மூலையிலே உட்கார்ந்துவிடக்கூடாது! உடற்பயிற்சி நல்லது! ஏழாவது கருத்து: தாகம் எடுக்கின்ற அளவுக்கு கடுமையான உடற்பயிற்சி வேண்டாம்!

எட்டாவது கருத்து: உணவில் அதிகமாக மாமிச கொழுப்புச் சத்து (Animal Fat) சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்!

ஒன்பதாவது கருத்து: வாரத்துக்கு 2 அல்லது 3 தடவைக்கு மேலே அசைவம் சாப்பிட வேண்டாம்!

பத்தாவது கருத்து: உடல் எடை அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! கோபம் மாதிரியான உணர்ச்சிகளுக்கு அடிக்கடி இடம்கொடுக்க வேண்டாம்!

இந்தப் பத்துக் கருத்துக்களும்... மருத்துவ ஆராய்ச்சி மூலமாக கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருத்துக்கள். அதனால் இதை மனதிலே வைத்துக் கொண்டு அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொண்டால்,

வழக்கத்தைவிட அதிகமாக ஒரு 10, 15 ஆண்டுகள் இந்த உலகத்திலே வாழ முடியும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

நம்மில் பல பேருக்கு இந்த உலகத்திலே அதிக நாள் வாழனும் என்பதைவிட அதிக நாள் இளமையாக இருக்க வேண்டும் என்பது தான் ஆசை! இரண்டு வயதானவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வயது ஆக ஆக உடம்பிலே பலம் குறைந்து போயிடுது சார்... அதுதான் கவலையாக இருக்கு என்றார் ஒருவர்.

இன்னொரு வயதானவர் சொன்னார்! "எனக்கு அப்படி இல்லை சார்... சின்ன வயதிலே எனக்கு என்ன பலமோ அதே அளவு பலம்தான் இப்பவும் இருக்கு!" என்றார்.

"அது எப்படி?" என்று ஆச்சரியமாகக் கேட்டார் அவர். அதற்கு இவர் பதில் சொன்னார்: "எங்க வீட்டிலே ஒரு பெரிய அம்மிக்கல்லு உண்டு சார்! சின்ன வயதிலே என்னாலே அதைக் கொஞ்சம்கூட அசைக்க முடியாது... இப்பவும் என்னாலே அதைக் கொஞ்சம் கூட அசைக்க முடியலே சார்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், சர்வ தேச முதியோர் தினம் மற்றும் முதி யோருக்கான ஆரோக்கிய வாழ்வுக் கான வழி காட்டல் முகாம் நேற்று வெள்ளிக் கிழமை" ஆரோக்கியமான முதுமை" எனும் தொனிப்பொருளில் கிளி நொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

(படங்கள்: கிருஸ்ணகுமார், தேவானந்தன்)

# உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனைக் கண்காட்சி கிளிநொச்சியில்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில், கிளி முயற்சியாளர் - 2025 தொழில் முயற்சியாளர்களுக்கான விற்பனைக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றிற்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் குறித்த விற்பனைக் கண்காட்சி இன்றைய தினமும் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள கிளி முயற்சியாளர் சந்தையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் பதில் உதவிப் பணிப்பாளர் ச.சசீபன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் பிரதமவிருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனும், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) அஜிதா பிரதீபன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த விற்பனைக் கண்காட்சியில் உணவு உற்பத்திகள், ஆடை உற்பத்திகள், பனைசார் உற்பத்திகள், வியாபார ஆலோசனை, தோற்பொருள் உற்பத்திகள், விவசாய உற்பத்திகள், கைப்பணி உற்பத்திகள், அழகுக் கலை தொடர்பான சேவைகள் முதலான பல் வேறு முயற்சியாளர்கள் பங்கேற்றுள்ளதுடன் இதனைப் பார்வையிட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து பயன்பெறுமாறும் கிளிநொச்சி மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இலவசமாக வழங்கப்பட்டுள்ள கிளி முயற்சியாளர் சந்தையில் சிறு தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளைத் தினமும் விற்பனை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 250 | 200 | 180-200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 | 225 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 300 | 300 | 220 |
| தக்காளி | 200 | 200 | 250 | 240 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 300 | 150 | 200 |
| கோவா | 180 | 150 | 200 | 200 | 140 |
| கரட் | 250 | 250 | 250 | 200 | 170 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 | 40 |
| புடோல் | 250 | 300 | 200 | 250 | -- |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-300 | 300 | 300 | 150-220 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 150 | 165 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 450 | 350 |
| வெண்டக்காய் | 200 | 200 | 150 | 300 | 150 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 300 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 200 | 300 | 240 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 240 | 160 |
| பீற்றூட் | 150 | 120 | 200 | 150 | 100 |
| கறிமிளகாய் | 250 | 450 | 400 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 200 | 100 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 500 | 320 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 250 | 150 | -- |
| கீரை - 1 பிடி | 140 | 60-150 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 1500 | 1400 | 1600 | 2000 | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-200 | -- |
| இராசவள்ளி | 800 | 900 | 1200 | 800 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 600 | 480 | -- |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 200 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 150 | 60 | -- |
| வல்லாரை | 100 | 50 | 100 | 80 | -- |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 250 | -- |

# இராசிபலன்

18.10.2025
ஐப்பசி-01 சனிக்கிழமை
துவாதசி பிற்பகல் 2.20 மணிவரை
பூரம் பிற்பகல் 6.13 மணிவரை

சுப நேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 09.02-10.32 மணிவரை
சனிப்பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்: திருவோணம், அவிட்டம்

வளவன்

**மேஷம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் குடும்பப் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்வார்கள்.

**கடகம்** — புதிய பொருள் செயற்கையுண்டு, உங்கள் கருத்துக்களுக்கு கௌரவம் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** — எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன் வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** — பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தினரிடையே தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்.

**ரிஷபம்** — உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**சிம்மம்** — நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவர், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** — செய்தொழில் வளர்ச்சிக்கு எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கும்பம்** — மதி நுட்பத்தால் மகத்தான காரியங்களை செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே ஒற்றுமை கூடும், போசக சுகமுண்டு.

**மிதுனம்** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** — அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயன சுக குறைவுண்டு.

**தனுசு** — அரைகுறையாக இருந்த காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், போசன சுகமுண்டு.

**மீனம்** — உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள்.

வார்த்தையால் பேசுவதை விட வாழ்ந்து காட்டுவதே சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 888





“அதைத் திறக்கும் வழியை நன்றாய்த் தெரிந்து கொண்டாயல்லவா?” என்று ரவிதாஸன் கேட்டான்.

“தெரிந்து கொண்டேன். இனி உனக்குக் கவலை வேண்டாம். ஒப்புக் கொண்ட காரியத்தை நிச்சயமாகச் செய்து முடிப்பேன்! சுந்தர சோழனுடைய வாழ்க்கை வெள்ளிக்கிழமையோடு முடிவடையும்! இம்மாதிரியே நீங்களும் உங்கள் காரியத்தைச் செய்யுங்கள்” என்றான் சாம்பவன்.

“இளையராணி கரிகாலனைப் பார்த்துக் கொள்வாள் அதைப் பற்றிக் கவலையில்லை. அந்தக் குட்டிப் புலி கடலிலிருந்து தப்பி வந்து நாகைப்பட்டினத்தில் இருப்பதாகக் காண்கிறது. ஆனால் இந்த தடவை அவன் தப்ப முடியாது. அவனைக் காப்பாற்றி வந்த இரண்டு பெண் பேய்களும் இப்போது இத் தஞ்சையில் இருக்கின்றன. ஓடக்காரப் பெண்ணையும், ஊமைச்சியையும் கூட்டத்தில் பார்த்தேன். அந்த வீர வைஷ்ணவத் துரோகிகூட இங்கேதான் இருக்கிறான். ஆகையால் குட்டிப் புலியும் இனித் தப்ப முடியாது. நாகைப் பட்டினத்துக்குக் கிரம வித்தனை அனுப்பப் போகிறேன். சுந்தர சோழனுடைய குலம் இந்த வெள்ளிக்கிழமை நசிந்துவிடும்”

“அப்புறம் மதுராந்தகத் தேவன் இருப்பானே?” “அவன் இருந்தால் இருக்கட்டும் அப்படிப்பட்ட ஒரு பேதை இன்னும் சில காலத்துக்குச் சோழ நாட்டுச் சிங்காசனத்தில் இருந்து வருவதுதான் நல்லது. பாண்டியச் சக்கரவர்த்திக்கும் வயது வரவேண்டும் அல்லவா?”

இவ்வாறு பேசிக் கொண்டே ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் வந்த வழியோடு விரைந்து சென்றார்கள்.

## 29 ஆம் அத்தியாயம
## இராஜ தரிசனம்

அவர்கள் மறைந்த பிறகு ஊமை ராணி சுரங்கப்பாதை தென்பட்ட இடத்துக்கு வந்தாள். உற்று உற்றுப் பார்த்துப் பாதையைத் திறப்பதற்கு முயன்றாள், முடியவில்லை. ரவிதாஸன் அப்பாதையைத் திறந்தபோது அவள் தூரத்தில் நின்றபடியால் திறக்கும் வழியை அவள் கவனித்துப் பார்த்துக் கொள்ள முடியவில்லை. இரண்டு பேரில் ஒருவனாவது அங்கே கட்டாயம் திரும்பி வருவான் என்று அவள் மனத்தில் நிச்சயமாகப் பட்டிருந்தது. ஆகையால் அவ்விடத்திலேயே காத்திருக்கத் தீர்மானித்தாள்.

அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. ரவிதாஸனை வெளியில் அனுப்பிவிட்டுச் சோமன் சாம்பவன் அங்கே திரும்பி வந்தான். அவன் கையில் தீவர்த்தி இருந்தது. ஆனால் முன்னைக் காட்டிலும் மங்கலாக எரிந்தது. ரவிதாஸனிடம் அவன் எவ்வளவோ தைரியமாகத்தான் பேசினான். ஆயினும் அவன் மனத்தில் பீதி போகவில்லையென்பது சுற்று முற்றும் மிரண்டு பார்த்துக் கொண்டு வந்ததிலிருந்து தெரிந்தது.

சுரங்கப்பாதை திறந்த இடத்தின் அருகில் வந்து அவன் பீதியுடன் உட்கார்ந்து கொண்டான். சற்று நேரத்துக்கெல்லாம் தீவர்த்தி அணைந்து விட்டது. பிறகு அவன் சுவரின் உச்சியின் மீதிருந்த பலகணியை அடிக்கடி அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## உழைப்பே அதிர்ஷ்டம் தரும்



ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார்.

தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை பற்றி கவலையாக இருந்தார். ஒரு நாள் அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார்.

தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அது மட்டுமல்ல நிலங்களில் ஓரிடத்தில் ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக் கொள்ளும் படிச் சொல்லிவிட்டு இறந்து போனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின் அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்க வில்லை. ஒருவேளை அப்பா "இரண்டடி" என்று சொல்வதற்கு பதிலாக "ஓரடி" என்று சொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து மூத்தவனின் நிலத்தை இன்னும் ஒரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில் இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான்மிஞ்சியது.

“இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விட முடியும்” என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே! அப்பா மேல் வருத்தம் வந்தாலும் அவர்கள் “சரி.. தோண்டியது வீணாக வேண்டாம் என்று எண்ணி அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். தினமும் நீர் பாய்ச்சினார்கள். தினமும் உரம் போட்டார்கள். உழைப்பு வீண் போகுமா?

ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல் பெற்றார்கள். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை இலாபம் கிடைத்தது.

இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு காலத்திலும் நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அப்பொழுது தான் புதிய சவால்களை ஏற்க முடியும். – சேகுவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாகாண சபை அதிகாரங்களை அமுலாக்கும் துணிவும் வேண்டும்

நாளை மறுதினம் 20ஆம் திகதி திங்கட்கிழமை தீபாவளிப் பண்டிகை.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மறுநாள் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங் கள் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறையை அறிவித்துள்ளன.

வடக்கு மாகாணத்தின் நிலைப்பாடு என்ன என்று ஆர்வலர்கள் கேட்டிருந்தனர்.

வடக்கு மாகாணம் எப்போதும் தீர்மானம் எடுப்பதில் கடுமையாக யோசிக்கும் மாகாணம் என்பதால், அதுபற்றி நாம் பிரஸ்தாபிக்கத் தேவையில்லை என்பது நம் பதிலாயிற்று.

அதேவேளை தீபாவளிப் பண்டிகைக்கு மறு நாள் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்க வேண்டுமா? என்பது கூட வாதப் பிரதிவாதங்களுக்கு உட்படக்கூடியது.

இருந்தும் மாகாண சபைகள் தமக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைப் பயன்படுத்தத் தெரிய வேண்டும்.

உண்மையில் 13ஆவது அரசியலமைப்பினூடு உருவாகிய மாகாண சபைகளுக்கு குறிப்பிடத்தக்க அதிகாரங்கள் உண்டு. எனினும் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தவல்ல முதலமைச்சர்களும் ஆளுநர்களும் இருந்தால் மட்டுமே மாகாண சபை ஆட்சி என்பது அர்த்தமுடையதாக – பயனுடையதாக இருக்கும்.

எனினும் நாட்டில் சில மாகாணங்கள் தமக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை அமுல்படுத்துவதைக் காணமுடிகிறது.

அதில் மத்திய, ஊவா மாகாணங்கள் கடந்த காலங்களிலும் தீபாவளிப் பண்டிகைக்கு மறுநாள் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கியுள்ளன.

இவ்வாறு விசேட விடுமுறையை வழங்குவதன் மூலம், அந்த மாகாணங்கள் தங்களுக்குரிய அதிகாரங்களைப் பிரயோகித்து தங்களை வலுப்படுத்துகின்றன என்ற உண்மையை நாம் உணர முடியும்.

இது விடயத்தில் வடக்கு மாகாணம் மிகவும் மந்தமாகவே உள்ளது. தீபாவளி மட்டுமல்ல கடும் மழை வெள்ளம் சூறாவளி என்றால்கூட, அன்றைய நாளில் பாடசாலைகளை மூடுங்கள் என்று உத்தரவிடுகின்ற திராணிகூட நம் வடக்கு மாகாண சபையிடம் இல்லை.

இதைத் தனித்து ஆளுநர்களை மையப்படுத்தி மட்டும் நாம் இங்கு கூறவில்லை. மாறாக வடக்கின் முதலமைச்சர்கூட அத்தகைய தீர்மானங்களை எடுக்கவில்லை எனும்போது, எங்களால் வடக்கு மாகாண சபைக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்த முடியாது – பயன்படுத்தத் தெரியாது – பயன்படுத்தப் பயம் என்ற உண்மைகளை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆம், எங்கள் வடக்கு மாகாணம் அமுலாக்கிய ஒரே ஒரு அதிகாரம்; முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து அதனை இரவோடு இரவாக ஆளுநரிடம் கொண்டு சென்று கொடுத்ததாகும். இதைத் தவிர வேறு எதையும் நம் வடக்கு மாகாண சபை செய்யவில்லை.

அவ்வாறு செய்திருந்தால், மாகாண சபை அதிகாரத்துக்கு உட்பட்டு எத்தனையோ நம் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியிருக்க முடியும்.

என்ன செய்வது எங்களுக்கு மாகாண சபை அதிகாரம் மட்டுமல்ல, அதை அமுலாக்குவதற்கும் ஆட்கள் தரப்பட வேண்டும் என்பது தான் நிதர்சனமான உண்மை.

# மக்கள் ஏற்றுக் கொள்ளாத சட்டம் பாராளுமன்றில் நிறைவேறாது

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளாத எந்தச் சட்டமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாதெனவும் பொதுமக்கள் நிராகரிக்கும் சட்டங்களால் எந்தப் பயனும் இருக்காதென்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று (17) சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் 28ஆவது தேசிய ஆசிரியர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோது ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிக்கையில்,

பெற்றோர்கள் குழந்தைகள் மீதான எதிர்பார்ப்புகளை நியாயமாகவும் நீதியாகவும் நிறைவேற்ற வேண்டும். இதற்காக நாங்கள் பாரிய கல்விச் சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தியுள்ளோம்.

சில சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் ஒரு விடயத்தைத் தெளிவாகக் கூறுகிறேன்.

பொதுமக்களுக்காகவே சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. எனக்காகவோ அல்லது பாராளுமன்றத்திற்காகவோ அல்ல. பொதுமக்கள் உடன்படாத எந்தச் சட்டமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாது என உறுதியளிக்கிறேன். சட்டங்கள் மக்களுக்காகவே இயற்றப்படுகின்றன.

மக்கள் அவற்றை ஏற்கவில்லை என்றால், அந்தச் சட்டங்களால் எந்தப் பயனும் இருக்காது.

ஆட்சியாளர்களின் நலன்களுக்காக அல்ல, மக்களின் நலன்களுக்காகவே சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தங்காலையில் நாய்களையும் விட்டுவைக்காத ஐஸ் போதை

தங்காலைக் கடற்றொழில் துறைமுகத்தில் ஐஸ் போதைப்பொருளை உட்கொண்ட நாய்கள் வழமைக்கு மாறான வித்தியாசமான நடத்தையை வெளிப்படுத்தியதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் தெற்கு கடற்பரப்பில் மிதந்த நிலையில் கைப்பற்றப்பட்ட சட்டவிரோதப் போதைப்பொருட்கள் அடங்கிய பொதிகள் வைக்கப்பட்டிருந்த பகுதியிலுள்ள நீரைப் பருகிய பின்னரே இந்த நாய்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளன.

நாய்கள் ஒரே இடத்தில் வட்டமாகச் சுற்றித் திரிதல், அசாதாரணமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றன அவதானிக்கப்பட்டுள்ளது. நாய்களின் இந்த விசித்திரமான செயற்பாடு தொடர்பில் அதிகாரிகள் மேற்கொண்ட பரிசோதனையின் போதே அவை ஐஸ் போதைப் பொருள் கலந்த நீரைப் பருகியமை தெரியவந்துள்ளது. (ம-7)

## வைரவிழா நிகழ்வுகள் கலைத்தூது கலையகத்தில்

(யாழ்ப்பாணம்)

காலநிலை சீரின்மையால் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இல 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் நடைபெறவிருந்த திருமறைக் கலாமன்றத்தின் வைரவிழா நிகழ்வுகள் அனைத்தும் இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும் எனத் திருமறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது. (ம-7)

### நலன்புரிப்பணம் தருவதாக

## வயோதிபப் பெண்ணிடம் ரூ.90 ஆயிரம் பணம் அபேஸ்

(யாழ்ப்பாணம்)

நலன்புரிப் பணம் தருவதாகக் கூறி வயோதிபப் பெண்ணிடம் 90 ஆயிரம் ரூபா பணத்தினை நபர் ஒருவர் திருடிச் சென்றுள்ளார்.

மண்கும்பான் 4 ஆம் வட்டாரத்தில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

[illegible] தருவதாகக் கூறித் தனியாக இருந்த வயோதிபப் பெண்ணிடம் நபர் ஒருவர் 40 ஆயிரம்ரூபா பணம் கோரியுள்ளார். பின் குறித்த பெண்ணிடம் இருந்த 90 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு சென்றுள்ளார்.

பொது மக்கள் இது தொடர்பில் விழிப்பாக [illegible] எச்சரிக்கப் [illegible] (ம-7)

### திருக்கேதீஸ்வர வளைவு உடைப்பு

## மேலும் 10 நபர்களுக்கு எதிராக வழக்கு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வர வளைவு உடைப்பு சம்பவம் தொடர்பில் முதல்முறையாக மேலும் 10 நபர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் இடம் பெற்றுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நீதவான் நீதிமன்றத்திலே திருக்கேதீஸ்வரக் கோயில் வளைவு 2019 ஆம் ஆண்டு உடைத்த சம்பவம் சம்பந்தமான வழக்கு இன்று (நேற்று) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆறு வருடங்கள் கடந்த நிலையிலேயும் இன்றைக்குத் தான் (நேற்று) முதல் தடவையாக மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு 10 பேருக்கு எதிராக இந்த வழக்கு ஆரம்பம் ஆகியிருக்கிறது.


அதிலே ஒருவர் மரணித்துவிட்டார். மீதம் உள்ள ஒன்பது பேர் விசாரணைக்காக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

முதலாவது சாட்சி, சாட்சியம் அளித்துக் கொண்டிருந்த வேளையிலே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கூண்டிலே இருக்கிறவர்களுக்கும் அதிகமானவர்கள் இந்த வளைவு உடைப்புச் சம்பவத்திலே ஈடுபட்டிருந்தார்கள் என்று கூறிய காரணத்தினாலே குற்றப்பத்திரிகையில் அந்தப் பத்து பேருடைய பெயர் மட்டும்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவர்களும் வேறு ஆட்களும் சேர்ந்து அதைச் செய்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்காத காரணத்தினாலே விசாரணை அந்த நிமிடத்தோடு நிறுத்தப்பட்டு குற்றப்பத்திரிகை அப்படியாக திருத்தப்பட்ட பிறகு அதாவது கூடுதலாக இருந்தவர்களும் கண்டுபிடிக்கப்பட்டு குற்றஞ்சாட்டப்பட வேண்டும் அல்லது குற்றப்பத்திரிகையிலே இப்போது குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் வேறு ஆட்களும் என்று அந்தக் குற்றப்பத்திரிகை திருத்தப்பட வேண்டும் என்று நீதவான் கூறியதன் காரணமாக சாட்சியம் இடைநிறுத்தப்பட்டு மேலதிக விசாரணைக்காக, மேலதிக விளக்கத்துக்காக 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதிக்கு திகதி இடப்பட்டிருக்கிறது.

அன்றைய தினம் அநேகமாகக் குற்றப்பத்திரிகை திருத்தப்பட்டு இந்த வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவித்தார். (ம-7,285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

26

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

*1937* நவம்பர் 5 இல், குடியேற்ற நாட்டு அதிகாரி, தன் புதிய தேசாதிபதியிடம் இலங்கையின் அரசியற்றிட்டத்தின் நிலையைப் பரிசீலனை செய்து, அதனைப்பற்றி எல்லோரினதும் அபிப்பிராயங்களையறிந்து ஒரு பூரண அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பணித்தார். அவர், மந்திரி சபையின் அறிக்கைகள், சிறுபான்மையினர் கூற்றுக்கள், பல முன்னேற்றக் கழகங்களின் அறிக்கைகள், தூதுக்குழுக்களின் எண்ணங்கள் யாவையும் நன்கு கற்றும், விசாரணை செய்தும் அறிந்தார்.

சிலர் வாக்குரிமையைக் கட்டுப்படுத்தவேண்டு மென்றனர். வேறு சிலர், மேற்சபை ஒன்றினை அமைக்க வேண்டுமென்றனர், சிறுபான்மையினர் "ஐம்பதுக்கு ஐம்பது" அதாவது, சட்டசபையின் உறுப்பினர்கள், சிங்களவருக்கும் சகல சிறுபான்மை யினருக்கும் சமமாக இருக்க வேண்டுமென்ற திட்டத்தைச் சமர்ப்பித்தனர். இவ்விதமாக பூரண விசாரணை நடத்தியபின் அவர், *1938* யூன் 13 இல், அதிசிறந்த அறிக்கை ஒன்றினை புதுக் குடியேற்ற நாட்டுச் செயலாளர் திரு மல்க்கம் மக்டொனல்டுக்கு அனுப்பி வைத்தார்.

அவ்வறிக்கையில் சேர். கல்டிக்கொட், அரசுக் கழகத்தில் இன அடிப்படையில் அங்கத்துவம் வழங்குவதற்கு, கணித முறையை உபயோகித்தலை எதிர்த்தார். அதற்குப் பதிலாக அவர், வாக்காளர் தொகுதிகளின் எல்லைகளை மாற்றி அமைக்கவும், அவற்றிலிருந்து கூடுதலான சிறுபான்மை உறுப்பினர் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பைக் கொடுக்கும் நோக்கமாக எல்லைகளைக் குறிப்பிடுவதற்கு ஒரு விசாரணைச் சபை ஏற்படுத்தல் வேண்டுமென ஆலோசனை கூறினர்.

அவரது அறிக்கையின் முக்கியமான அம்சம் யாதெனில், நிருவாகக் குழு ஆட்சிமுறை நீக்கப்பட வேண்டுமென்பதேயாகும். "அரசுக் கழகமானது, ஓர் அரசியல் விவாதக் கழகமாக இருக்கிறதேயன்றி, ஒரு முறையான அரசாங்கமாக இருக்கவில்லை" என்றார் அவர். "நிருவாகம் தாமதப்பட்டதும், தொல்லையானதுமாய் மாறி விட்டது". மந்திரிகள் பொறுப்பில்லாது இருந்தனர் அவர்கள் நிருவாகக் குழுக்களினால் தெரிந்தெடுக்கப்படும் முறை விரும்பத்தக்கதல்ல. மந்திரிசபைக்கு வரவு செலவுத் திட்டத்தை மாற்ற அதிகாரமிருந்தது, ஆனால் அதனை உருவாக்க அதிகாரமில்லை.

இக்காரணங்களுக்காக தேசாதிபதி, "கபினட் முறை" அமைக்கப்பட வேண்டுமெனச் சிபார்சுசெய்தார். கபினட் ஆட்சி முறையின் கீழ்தான், ஓர் உறுதியான கட்சி முறை வளரும் என்றும், அவர் உறுதியாக நம்பினார்.

*1938* நவம்பர் 10 ஆம் நாள், திரு. மக்டொனல்ட், நிருவாகக் குழு ஆட்சி முறைக்குப் பதிலாக கபினட் முறையை அமைக்கும் ஆலோசனைக்கு விருப்பம் தெரிவித்து, ஓர் உத்தியோகபூர்வமான பதிலை அனுப்பி வைத்தார், அவர் அதில், தேசாதிபதியின் அறிக்கை, சட்டசபையில் விவாதிக்கப்படவேண்டுமெனக் கேட்டிருந்தார்.

*1939* இல் உலக யுத்தம் ஆரம்பமாயிற்று. இக்காரணத்தினால் . புதுத்திட்டத்தைப் பற்றிய தீர்மானங்கள், யுத்தம் முடியும் வரை பின்போடப்பட்டன.

இலங்கைவாழ் மக்கள், போர் முயற்சிகளில் பிரிட்டனுடன் மனப்பூர்வமான விசுவாசத்துடன் ஒத்துழைத்தபோதிலும், தம் அரசியற் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியை, போர் முடிவடையும்வரை பின்போடுவர் என எதிர்பார்ப்பது சாத்தியமற்றது, என்பதை ஆங்கிலேயர் நன்கறிவர். 1941 ஆம் ஆண்டின் தொடக்கத்துக்குப் பிந்தாமல், அரசுக்கழகம் கலைக்கப்பட்டு ஒரு பொதுத் தேர்தல் நடைபெற வேண்டுமென அரசியற்றிட்டம் விதித்திருந்தது. எனவே *1941* இல், புது அரசியற்றிட்டமொன்றினை செய்ய வேண்டும் அல்லது தேர்தல்களைப் பின்போட வேண்டுமென்ற நெருக்கடியான சூழ்நிலை எழுந்தது.

மந்திரி சபை, புது அரசியற்றிட்டமொன்றினையே பெரிதும் விரும்பியது. அரசியற்றிட்ட பிரச்சினையானது பல்லாண்டுகளாக விவாதிக்கப்பட்டவொரு விடயமாகும். புதிதாக எடுத்துரைக்க வேண்டிய நியாயங்கள் ஒன்றுமேயிருக்கவில்லை. எனவே பிரித்தானிய அரசாங்கம், தனது பொறுப்பையுணர்ந்து ஒரு தீர்மானத்தையெடுத்து, புதுத்திட்டத்தை வெளியிடுமென எல்லோரும் எதிர்பார்த்தனர்.

### ஜப்பானின் போர்ப் பிரவேசம்:

**1941 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3 ஆம் நாள், ஜப்பான் ஒருவித எச்சரிக்கையுமின்றி அமெரிக்காவின் கடற்படை தங்கி நின்ற பேள் ஹாபர் (Pearl Harbour) மேல் குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்து, பெரும் அழிவையும் நாசத்தையும் ஏற்படுத்திற்று. உடனே அமெரிக்கா ஜப்பான் மீதும், மற்றும் அச்சு நாடுகள் மீதும் போர் தொடுத்திருப்பதாக அறிவித்தது.**

அமெரிக்கா போருக்கு ஆயத்தமாக முன், கீழ்த்திசை நாடுகளையெல்லாம் கைப்பற்றிவிடத் தீர்மானித்த ஜப்பான், பல நாடுகளை ஒன்றன் பின் ஒன்றாகத் தாக்கி, தொடர்பான வெற்றிகளை ஈட்டிக்கொண்டு மின்னல் வேகத்தில் முன்னேறி வரலாயிற்று.

இந்நிகழ்ச்சி, இலங்கையில் நிலவிய சூழ்நிலையை புரட்சிகரமாக மாற்றியமைத்தது. ஜப்பானியர், ஹாங்காங், பிலிப்பீன்தீவுகள், மலாயா, சிங்கப்பூர், பர்மா, நியூகினி எனும் நாடுகளை வென்று, *1942* இல் இந்தியாவின் வடகிழக்கு எல்லையிலிருந்த மணிப்பூர்வரை முன்னேறியதன் பயனாக, இலங்கையும் அவர்களுடைய தாக்குதல்களுக்கு இலக்காகக் கூடிய நிலையை எய்தியது.

இவ்வாபத்தான நிலையில் உள்ளூர் அரசியற் பிரச்சினைகளிலும் பார்க்க அவசரமானதும், முக்கியமானதுமான பாதுகாப்புப் பிரச்சினைக்கு முதலிடம் கொடுக்க வேண்டியதாயிற்று. எனவே தேர்தல்கள் பின்போடப்படுமென குடியேற்ற நாட்டுச் செயலாளர் செய்த தீர்மானத்தை (இலங்கை) மந்திரிசபை எதிர்ப்பின்றி ஏற்றது. கிழக்கே எழுந்த அபாயத்தை மேற்கொள்வதற்காகப் பிரித்தானிய அரசாங் கம், இலங்கையின் பாதுகாப்புப் பொறுப்பையேற்பதற்கு தலைமைத் தளபதியாக சேர். ஜியோப்ரி இலெயிற்றனை நியமித்தது. சேர் அன்ட்று கல்டிக்கொட் இன்னும் நாட்டின் குடியியற் சேவைகளின் தலைவராகவும், பெயரளவில் தேசாதிபதியாகவும் கடமையாற்றினார்.

புது நிலையில், நாட்டின் பரிபாலனத்தை நடாத்துவதற்காக தேசாதிபதி, தலைமைத்தளபதி, எல்லா அமைச்சர்கள், முப்படைகளின் தலைவர்கள், தேச பாதுகாப்பு அதிகாரி சேர். ஒலிவர் குணத்திலக்கா என்பவர்களைக் கொண்ட ஒரு போர்ச்சபை (War Council) நிறுவப்பட்டது. எதிர்காலத்தில் தேசாதிபதி நாயகமாகவும், இலங்கைச் சுதந்திரத்தின் பிரதம சிற்பிகளில் ஒருவராகவும் திகழவிருந்த குணத்திலக்கா, இவ்விதமாக ஓர் இக்கட்டான நிலையில் நாட்டின் விவகாரங்களில் பிரவேசித்தார். *1942* ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் ஜப்பான் இலங்கையைத் தாக்கும் என்ற அச்சம் நாளாந்தம் வளர்ந்து வந்தது. ஏப்ரில் 5 ஆம் நாள், ஈஸ்ற்றர் ஞாயிறன்று, 75 யப்பானிய விமானங்கள் கொழும்பின் மேல் குண்டுகளைப் பொழிந்தன.

### ஸ்ரா போட் கிறிப்ஸ் விசாரணைச் சபை

இக்காலமாகிய *1942* ஆம் ஆண்டில், இந்தியாவின் எதிர்கால அரசியல் நிலையை விசாரணை செய்வதற்கென சேர். ஸ்ரா போட் கிறிப்ஸ் (Stafford Cripps) என்பவரைப் பிரித்தானிய அரசாங்கம் அனுப்பி வைத்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண...

டிருக்கும் என மின்சார சபையின் வடமாகாணப் பிரதிப் பொதுமுகாமையாளர் எஸ்.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வவுனியா - மன்னார் 220 கிலோ வோட் மின் பரிமாற்ற வடத்தினை மாற்றியமைப்பதற்கான வேலைகளிற்காக, வடமாகாணத்திற்கான 132 கிலோ வோட் வவுனியா - புதிய அநுராதபுர மின் பரிமாற்ற கட்டமைப்பானது எதிர்வரும் ஐப்பசி 26ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை துண்டிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்கள் முழுவதும் மின் விநியோகம் துண்டிக்கப்படும். மேலும் வேலைகள் பூர்த்தியாகியவுடன் மின் இணைப்பானது உடனடியாக மீள வழங்கப்படும் என்றுள்ளது. (ம-7)

## மாங்குளத்தில்...

கட்டுப்படுத்த முடியாமல் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 22 வயது இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அதேநேரம் மற்றுமோர் பெண் படுகாயமடைந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## தீபாவளியன்று...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் வேண்டுகோளுக்கமைய, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஒப்புதலுடன் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தலை, மதுவரித் திணைக்களம் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இந்துக்களின் முக்கிய பண்டிகையான தீபாவளி நாளில் ஆன்மீகச் சூழலைப் பேணவும் மக்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவும் மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரிடம் இந்து சமய அமைப்புக்கள் எழுத்து மூலம் கோரிக்கை முன் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மந்திரிமனை...

தொல்லியல் திணைக்களத்தால் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு அகற்றப்படும் பொருட்களைப் பாதுகாப்பாகப் பேணி, மழை காலம் முடிவடைந்த பின்னர் மீளப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பெய்த மழை காரணமாக மந்திரிமனையின் பாகம் ஒன்று இடிந்து விழுந்தது. ஏற்கெனவே சேதமாகக் காணப்பட்ட குறித்த பகுதி இடிந்து விழாதிருக்க இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்டு பாதுகாக்கப்பட்ட நிலையில் இரும்புக் கம்பிகளைத் திருடர்கள் திருடிச் சென்றமையால், பாதுகாப்பின்றி இருந்த பாகம் மழைக்கு இடிந்து விழுந்திருந்தது.

அந்நிலையில் ஏனைய பாகங்கள் இடிந்து விழாது பாதுகாக்கும் வகையில் மீளவும் இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்டு அப்பகுதியினைப் பாதுகாத்தனர்.

இந்நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தில் மழை காலம் தொடங்கியுள்ளமையால் மந்திரிமனையின் மேல் கூரைகளின் பாரத்தால் சுவர்கள் இடியும் அபாயம் காணப்படுவதால், கூரைகளை அகற்றும் நடவடிக்கைகளைத் தொல்லியல் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

குறித்த மந்திரி மனையானது தனியார் ஒருவருக்குச் சொந்தமாகக் காணப்படுவதனால், அதனைப் புனரமைக்க அவர் இதற்கு காலங்களில் சம்மதம் தெரிவிக்காதமையாலேயே மந்திரிமனை புனரமைப்பு செய்யப்படவில்லை எனத் தொல்லியல் திணைக்களம் கூறியிருந்தது.

தற்போது மந்திரிமனையின் வாயில் பகுதியில் உள்ள கூரைகளை அகற்ற உரிமையாளர் சம்மதம் தெரிவித்த நிலையில் அவற்றைத் தற்காலிகமாக அகற்றி பாதுகாப்பாக வைத்திருந்து மழை காலம் முடிந்த பின்னர் மீளப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியுடன் தொல்லியல் திணைக்களம் பணிகளை முன்னெடுத்துள்ளது. (ம-7,33)

## பொலிஸ்...

குற்றக் குழுவைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் "மாத்தறை ஷான்" என்பவரின் நெருங்கிய சகா ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் ஏனைய இருவர், இஷாரா செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்து உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## கடற்...

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்றுப் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தப் பரந்த அளவிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இதன்போது கல்வி, பெண்கள் அதிகாரம், புத்தாக்கம், அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் மீனவர்களின் நலன் ஆகியமுக்கிய துறைகளில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தத் துறைகள் நாட்டின் நீடித்த வளர்ச்சி மற்றும் பரஸ்பர முன்னேற்றத்திற்கு முக்கிய மானவை என்று இரு தரப்பினரும் அடையாளம் கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு அண்டை நாடுகளுக்கும் இடையே வலுவான மற்றும் நீடித்த உறவுகள், நாட்டு மக்களின் மற்றும் பரந்த தெற்காசிய பிராந்தியத்தின் செழிப்புக்கு முக்கிய பங்கு வகிப்பதை அங்கீகரித்து, பல முனைகளிலும் ஒத்துழைப்பை ஆழப்படுத்த இரு பிரதமர்களும் இதன்போது உறுதிப்பாட்டை மேற்கொண்டனர். (ம-7)

## நான்கு மாகா...

தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பதில் பாடசாலை நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

**மஹஜன சம்பத** — திகதி 2025.02.17, சீட்டிழுப்பு இலக்கம் 5985 — H 9 1 2 7 2 2
**அத சம்பத** — H 2 7 2 2 — சீட்டிழுப்பு இலக்கம் 0560

**சுப தவசக** — திகதி 2025.10.17, சீட்டிழுப்பு இலக்கம் 101 — மீனம் — 03 23 27 — 6815

**தன நிதானய** — திகதி - 2025.10.17, சீட்டிழுப்பு இலக்கம் - 2015 — D 14 30 48 59 D

**மெகா பவர்** — திகதி 17/10/2025, சீட்டிழுப்பு இலக்கம் 2333 — O 12 45 46 49 79

**ஜய** — திகதி 2025.10.17, சீட்டிழுப்பு இலக்கம் 0253 — T 1 9 9 2

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 4227, சீட்டிழுப்பு திகதி 17.10.2025 — G 20 26 44 57 — G

**ஹந்தஹன** — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.10.17, சீட்டிழுப்பு இலக்கம் 1294 — கடகம் 04 16 22 44 கடகம்

**துரித லக்ஸ்மி / சம்பத்** — உத்தியோகபூர்வ முடிவுகள் — 17.10.2025 — வெற்றி வாரம் 0693 — M — 0 7 1 1 5 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,614,974.00

**SUPER BALL** — சீட்டிழுப்பு வாரம் 2959 — சீட்டிழுப்பு திகதி 2025.10.17 — தினம் வெள்ளிக்கிழமை — 15 41 56 78 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,004,801.60

**சனிதா** — திகதி 17.10.2025 — வெற்றி வாரம் 5120 — 18 46 53 68 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,583,045.60

**சசிரி** — வெற்றி வாரம் 0793 — சீட்டிழுப்பு திகதி 17.10.2025 — வெள்ளிக்கிழமை — 12 25 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000,000.00

**ராசி** — சீட்டிழுப்பு வாரம் 4671 — சீட்டிழுப்பு திகதி 17.10.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 05 23 49 62 மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,628,973.20

**கப்ருக** — சீட்டிழுப்பு வாரம் 2135 — 17.10.2025 வெள்ளிக்கிழமை — T 32 11 14 16 38 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.600,857,925.80

**அத கோட்டிபதி (ADA KOTIPATHI)** — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம்: 2785 — சீட்டிழுப்பு திகதி: 2025.10.17 — 11 13 18 19 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,121,466.40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறு குழு வகுப்புக்கள்
**(06 - O/L, A/L)**

மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப
தனியாகவோ, குழுவாகவோ
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
சிறந்த பெறுபேற்றுக்காக வழிகாட்டும்
உங்கள் ஆசான்.
(10 வருடக் கற்பித்தல் அனுபவம்)

**T.P : 077 482 5438**

(5680)

## தீபம் உயர் கல்விக் கல்லூரி
(யாழ்ப்பாணம் – கொக்குவில்)

தரம் 06 முதல் O/L, A/L வரை
தமிழ்மொழி மூலம், English Medium

யாழ் மாவட்டத்தில்... தமிழ் மொழி, ஆங்கில மொழி மூல வகுப்புகளுக்கு தனித்துவ நிறுவனமான **தீபம் உயர் கல்விக் கல்லூரி** 10 ஆவது ஆண்டில் தனது 2 ஆவது கிளையை கொக்குவில் மண்ணில் ஆரம்பிக்கின்றது.
என்பதை அன்பர்கள், நண்பர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனுமதிகள் அனைத்தும் November மாதம் முதல் வழங்கப்படும்.

"தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்"

**077 224 7781**

(C-4133)

## உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
(ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com

(C-4129)

## புதிய கிளைநிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு

18 வயதிற்கு மேற்பட்ட தரம் 10, O/L, A/L படித்த இளைஞர், யுவதிகளை இணைக்கவுள்ளோம். பயிற்சியின் போது 29,500 – 45,000 உம் பின்னர் 68,500 – 112,000 உம் வருமானம் வழங்கப்படும். EPF, ETF, Bonus என்பனவும் வழங்கப்படும்.

**077 985 8580**
**077 517 9034**

(1654)

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 200/= Max 3Kg |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 160/= |
| 1Kg றவை | - 282/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 230/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 280/= |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 209/= |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 240/= |
| 1Kg சம்பா அரிசி | - 240/= |
| 10Kg விஜிதா அரிசி | - 2690/= Max 01 |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 1099/= |
| 1Kg மல்லி | - 359/= |
| 1Kg கடலைப்பருப்பு | - 320/= |
| 1Kg பயறு | - 790/= |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= ~~70~~ |

MAX 03 ~~1200~~ **1130** 400g Anchor



1Kg சன்லைட் ~~320~~ **280**



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. **0777 8080 30**

(1656)

## யாழ்ப்பாணத்தில் Voyzant
### சுற்றுலாப் பயணம்

மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், வியட்நாம், மாலைதீவு, துபாய் போன்ற நாடுகளிற்கான சுற்றுலாப் பயணங்கள் தனிப்பட்ட/ குழுக்களிற்கு ஏற்றவாறும் செய்து தரப்படும்.



மேலதிக விபரங்களுக்கு : **Voyzant(PVT)Ltd**
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866

(C-4109)

## காணி விற்பனைக்கு உண்டு

**கோண்டாவில் உப்புமடச்சந்தியில் வீதியோரமாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**
**ஒரு பரப்பு 1 ½ கோடி கேட்கப்படுகிறது.**
**காளி கோவில் முன்பாக**

தொடர்பு : **077 302 7011**

(5646)

## பெண் ஊழியர்கள் தேவை

யாழில் புதிதாகத் திறக்கப்பட இருக்கும் இலங்கையின் முன்னணி நிறுவனமான UTC நிறுவனத்திற்கு பெண் ஊழியர்கள் தேவை. தமிழ் மற்றும் ஆங்கிலம் சரளமாகப் பேசக் கூடியவர்கள் அவசியம். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

01. Documentation Controller (Female)
02. Front office Executive (Female)

**Please send your CV along with details to our email**
Phone : 011 427 4110, 076 116 3355
Email : infoutclk@gmail.com

(1655)

## Anniversary Day Celebration
## வீனஸ் விசேட வைத்தியசாலை

**மாபெரும் இலவச நோய்கண்டறியும் பரிசோதனைகள்**
**தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெறும்.**

அண்மைக்காலங்களில் ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன் என்று பாராது அதிகரித்து வரும் தொற்றா நோய்களின் (மாரடைப்பு, கொலஸ்ரோல், பாரிசவாதம், நீரிழிவின் பக்கவிளைவுகள்) எதிர்பாராத மரணங்கள் எம்மை வேதனையடையச் செய்கின்றது. இவற்றைத் தடுக்கும் முகமாக வீனஸ் விசேட வைத்தியசாலையானது மக்களுடன் இணைகிறது.

இவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 40 வயதுக்கு மேற்பட்டோர் இவ் வாய்ப்பினைப் பயன்படுத்தி உங்கள் உடல் சுகாதாரத்தினைப் பாதுகாக்கும் இலவச பரிசோதனைகளை மேற்கொள்ளலாம்.

இலவசமான பரிசோதனைகள்:
- LIPID PROFILE
  - TOTAL CHOLESTEROL
  - HDL CHOLESTEROL
  - LDL CHOLESTEROL
  - TRIGLYCERIDES
- FASTING BLOOD SUGAR (FBS)
- BLOOD PRESSURE

நாள் : 19.10.2025 முதல் 25.10.2025
இடம் : வீனஸ் விசேட வைத்தியசாலை,
குறிப்பு :
பரிசோதனைகளைச் செய்வதற்கு முன் 10–12 மணித்தியாலங்கள் உணவு/தேநீர் அருந்தாமல் வரவும்.

வாட்ஸ்அப் மூலம் பதிவு செய்ய: **070 698 6832**

இவ் வைத்திய சேவையில் கலந்து கொள்ள விரும்புவோர், உங்கள் பெயர், முகவரி மற்றும் வயது ஆகிய விவரங்களை வாட்ஸ்அப் மூலம் கீழே உள்ள தொலைபேசி எண்ணிற்கு அனுப்பவும். நீங்கள் பரிசோதனைக்கு வரவேண்டிய நேரம் நாங்கள் அறியத்தருவோம்.

**இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக**
முன்னைய நாள் – மருத்துவ பீடப் பீடாதிபதியும், யாழ். பல்கலைக்கழக உப வேந்தரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினருமான **சிரேஷ்ட பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம்** அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

எமது வைத்திய சேவைக்கு உறுதுணையாய் இருந்த மதிப்பிற்குரிய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையாளர்கள் அனைவருக்கும் இந்த பொன்னான நாளில் நன்றி தெரிவிக்கின்றோம்.

**குருதிக்கொடை நிகழ்வு** இந் நன்நாளில் இன்னோர் உயிர்காக்கும் நிகழ்வாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, எமது வீனஸ் வைத்தியசாலை பணியாளர்கள், ஊழியர்களின் இரத்ததான நிகழ்வு எனும் தொனிப் பொருளில் இடம்பெறும் இந்நிகழ்வில் விரும்பியவர்கள் இரத்ததானம் செய்து மற்றவர் உயிர் காக்க உதவுவதோடு வீனஸ் வைத்தியசாலையினால் வழங்கப்படும் குருதிக்கொடை சான்றிதழினையும் அன்பளிப்புப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளவும்.

**19.10.2025 (ஞாயிற்றுக்கிழமை) காலை 09.00 மணி முதல்**
**வீனஸ் விசேட வைத்தியசாலை**

இரத்த தானம் செய்ய விரும்புவோர் இவ் இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்: 0778461053

(C-4128)

## ஏழாம் ஆண்டு நினைவு

பிறப்பு 1987 . 08 . 23



இறப்பு 2018 . 10 . 18

### அமரர் மரியதாஸ் நிலோஸ்

நிலோஸ் நீ சென்றுவிட்ட
அந்த நாள் முதல்
ஆண்டுகள் ஏழு சென்றுவிட்டன.
ஆனாலும் உன் புன்னகையும்
மென்மையான குரலும்
எங்கள் வாழ்வில் வழிநடக்கின்றன.
உலகம் தன்பாதையில் உருமும்
ஓசை எமக்குக் கேட்டவில்லை.
ஆனால் கண்ணீரிலிருக்கும்
எமக்கு உன்பெயர்
நிசப்தமாக ஒலிக்கின்றது.

நினைவுகளில் நீ வாழுகின்றாய்
மௌனமான எம் இரவுகளிலும்
மெதுவான எம் பிரார்த்தனைகளிலும்
எங்கள் இதயத்தின் ஆழத்தில்
தங்கியிருக்கின்றாய்.
காலம் வலியைத் தணித்தாலும்
கண்ணீரை முற்றிலும்
மறைக்கமுடியவில்லை உன் அன்பு.
அமைதியில் உறங்கு எம் அன்பனே
உன் ஆன்மா ஆண்டவரில் நித்திய
இளைப்பாற்றி அடைய
அடியவர் யாம் வேண்டுகின்றோம்

சென்தோமஸ் லேன்,
முனை, பருத்தித்துறை.

என்றும் உமக்காக செபிக்கும்
குடும்பத்தினர்

(C-4127)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.